நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 20-ம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் : 07 / 2025

CNR.No.TNTT07-000043-2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 548/2024 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர் |
| | | எதிரியின் விபரங்கள் |
| 3 | பெயர் | ஆரோக்கியராஜ் |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | ஜேசுதாஸ் |
| 5 | வேலை | - |
| 6 | முகவரி | பழத்தோட்ட நகர், கடலையூர் ரோடு, கோவில்பட்டி. |
| 7 | வயது | 52/2024 |
| | | **தேதி** |
| 8 | சம்பவம் | 13.11.2024 |
| 9 | புகார் | 18.11.2024 |
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரி கடந்த 13.11.2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:56:42 +0530

| | | |
|---|---|---|
| 11 | பிணை விபரம் | எதிரி கடந்த 13.11.2024 அன்று காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 24.06.2025 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 17.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை பிரிவு 4(1)(C) r/w 4(1)(a), 4(1)(A) r/w 4(1)(i) of TNP Act படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை விடுதலை செய்து BNSS பிரிவு 271(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி, அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | எதிரி மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 04.01.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தானே முன்னிலை ஆகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 17.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரி மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 13.11.2024 ஆம் தேதி 07.30 மணிக்கு கோவில்பட்டி – சாத்தூர் ரோட்டில் உள்ள வேலாயுதபுரம் மேம்பாலத்திற்கு அடியில் எதிரி வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் – 4 எண்ணம், 180 மிலி அளவு

Digitally signed by K ANAND
K ANAND
Date: 2026.07.20 17:56:47 +0530

கொண்ட Golden Vats பிராந்தி பாட்டில்கள் – 2 எண்ணம் ஆகியவற்றை அரசு அனுமதியின்றி சட்டத்துக்கு புறம்பாக, லாப நோக்குடன் விற்பனைக்கு வைத்திருந்தும், மதுபாட்டில்கள் விற்ற பணம் ரூ.200/– வைத்திருந்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது பிரிவுகள் 4(1)(i) r/w 4(1)(A) of TNP Act கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230 ன் படி கடந்த 24.06.2025 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரி மீது பிரிவுகள் 4(1)(C) r/w 4(1)(a), 4(1)(A) r/w 4(1)(i) of TNP Act படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 01.07.2025 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து BNSS பிரிவு 263 ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையான சான்றுப் பொருள்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) கடந்த 13.11.2024 ஆம் தேதி 07.30 மணிக்கு அசா.1 தாமோதரன், அசா.2 பொன்ராஜ், தலைமைக் காவலர் கார்த்திகேயன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின் படி மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்த போது, கோவில்பட்டி, வேலாயுதபுரம், ரயில்வே மேம்பாலம் அருகில் சந்தேகப்படும் படியாக கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையுடன் நின்று கொண்டிருந்த எதிரியை விசாரித்து, எதிரி

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:56:53 +0530

வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை சோதனை செய்த போது, அசா.பொ.1 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் 4 எண்ணம், அ.சா.பொ.2 சுமார் 180 மிலி அளவு கொண்ட Golden Vats பிராந்தி பாட்டில்கள் 2 எண்ணம், அசா.பொ.3 மதுபாட்டில்கள் விற்ற பணம் ரூ.200/– இருந்துள்ளது. எதிரி சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்றும், விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அசா.2, அசா.ஆ.2 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால், அத்தாட்சியில் அசா.1 அசா.ஆ.1 முதல் கையொப்பத்தையும், பட்டியல் சாட்சி 2 இரண்டாவது கையொப்பத்தையும் செய்துள்ளார்கள்.

5) பின்னர் அசா.பொ.1 முதல் அசா.பொ.3 உடன், எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் 08.30 மணிக்கு நிலைய குற்ற எண் 548/2024 U/s 4(1)(i), 4(1)(A) TNP Act ன் படி அசா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை அசா.2 உதவி ஆய்வாளர் பொன்ராஜ் பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினம் 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாடசாமி மற்றும் சோலையப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அசா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு 18.11.2024 அன்று வழக்கு சொத்துக்களை அசா.ஆ.6 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 17.07.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:56:58 +0530

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

7) அரசுத் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி பிரிவின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் வழியாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி பிரிவின் கீழ் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதுரை எடுத்துரைத்தார்.

8) எதிரி தரப்பில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை என்றும், அசா.1 மற்றும் அசா.2 ஆகிய சாட்சிகள் காவல் துறை சாட்சிகள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எதிர்வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

9) எதிரி அசா.பொ.1 மற்றும் அசா.பொ.2 யை சட்டவிரோதமாக விற்பதற்கும், மதுபாட்டில் விற்ற பணம் ரூ.200/-ம் வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசுத் தரப்பு வழக்காகும்.

10) அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கடந்த 13.11.2024 ஆம் தேதி 07.30 மணிக்கு போலீஸ் பார்ட்டி சகிதம் ரோந்து செய்த போது, கோவில்பட்டி, வேலாயுதபுரம், ரயில்வே மேம்பாலம் அருகில் கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:04 +0530

பையுடன் நின்று கொண்டிருந்த எதிரியை சோதனை செய்த போது, அ.சா.பொ.1 முதல் அசா.பொ.3 யை எதிரி வைத்திருந்ததாகவும், அ.சா.பொ.1 முதல் அசா.பொ.3 யை அத்தாட்சியில் கைப்பற்றி, அசா.2 வழக்கு பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார்கள். அசா.2 தனது சாட்சியத்தில் புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அசா.1 மற்றும் அசா.2 ஆகிய சாட்சிகள் காவல் துறை சாட்சிகள் ஆவார்கள்.

11) அசா.1 தனது குறுக்கு விசாரணையில் வேலாயுதபுரம் பாலம் என்பது இரண்டு கிலோ மீட்டர் தொலைவு என்றும், உதவியாளர் தன்னை விசாரித்த போது வழக்கு சம்பவம் பாலத்தில் எந்த திசையில் எங்கு வைத்து நடைபெற்றது என்று குறிப்பிட்டு தான் சொல்லவில்லை என்றும், ஆனால் எதிரி மதுவிற்றுக் கொண்டிருந்ததாகவும், தாங்கள் சம்பவ இடத்தில் சென்ற போது மதுபாட்டில் வாங்கிய ஆட்கள் இல்லை என்றும், எதிரி கையில் வைத்திருந்த பணம் அவர் மது விற்றுதான் பெற்றதாக தனக்கு நேரடியாக தெரியாது என்றும், ரோந்து சென்றதற்கு காவல் நிலையத்தில் வைத்து தனி அறிக்கை காலை 08.30 மணிக்கு தயார் செய்ததாகவும், அந்த தனி அறிக்கையின்படி தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், தனிஅறிக்கையில் தானும், கார்த்திக் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த பகுதி என்றும், வேலாயுதபுரம் பாலத்திற்கு அடியில் தான் லாயல் மில்லில் வேலை செய்பவர்களின் இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் என்றும், எனவே அந்தப் பகுதியில் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றும், அந்த தனிநபர்களை தாங்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், பொதுவாக தனிநபர் பயன்பாட்டிற்காக 4.5 லி மதுபானம் வைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதி தேவை இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12) அசா.2 தனது குறுக்கு விசாரணையில் வேலாயுதபுரம் பாலம் சுமார் 1/2 கி.மீ. தொலைவு இருக்கும் என்றும், வழக்கு சம்பவம் எந்த திசையில் நடைபெற்றது என்ற அத்தாட்சியில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், வழக்கில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பை அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக துலங்காது என்றும், அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து வழக்கு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:12 +0530

சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதற்கு எதிரிக்கு ரசீது கொடுக்கவில்லை என்றும், தாங்கள் சம்பவ இடம் சென்ற போது எதிரி மதுபாட்டில்களை விற்றுக் கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றும், எதிரி யாருக்கு மது விற்றார் என்று விசாரித்த போது சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்றும், இந்த வழக்கில் தனி அறிக்கை தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், பொதுவாக தனிநபர் அவரது சொந்த பயன்பாட்டிற்காக சுமார் 4 1/2 லிட்டர் மது வைத்துக் கொள்ளலாம் என்றும், இந்த வழக்கில் எதிரியிடமிருந்து 6 எண்ணிக்கையில் மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளதால் அது அரசு அனுமதித்த அளவுக்கு உட்பட்டது என்றும், எதிரி மதுபாட்டில்கள் அதிக விலைக்கு விற்றதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13) வழக்கு சொத்து மது பாட்டில்கள் எந்த கடையில் இருந்து விலைக்கு வாங்கப்பட்டது என்பது குறித்து புலன் விசாரணை அதிகாரி முறையாக விசாரிக்கவில்லை. மேலும் அரசு தரப்பில் எதிரி மதுபாட்டில்கள் விற்றுக் கொண்டிருந்ததாகவும் அல்லது வேறு நபர்கள் எதிரியிடமிருந்து மது பாட்டிலை அதிக விலைக்கு வாங்கிக் கொண்டிருந்ததாகவும் நடுநிலையான சாட்சிகள் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரியை குற்ற சம்பவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் நடுநிலையான சாட்சிகளோ அல்லது சூழ்நிலை சாட்சியங்களோ அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை.

14) இந்த வழக்கில் 13.11.2024 அன்று கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் கடந்த 16.11.2024 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து வாங்கப்பட்டதாக சொல்லப்படும் டாஸ்மாக் ஊழியர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அசா.1 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றும், அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில், அசா.2 தனது குறுக்கு விசாரணையில், சம்பவ இடத்தில் இருந்த தனிநபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், வெள்ளை நிற பிளாஸ்டிக் பை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:18 +0530

15) அசா.2 தனது முதல் விசாரணையில் தனி நபர்கள் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதற்கு கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், விசாரணை அதிகாரி தனி நபர்களை சாட்சியாக விசாரிக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது அரசுத் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சம்பவ இடத்தில் தனிநபர்கள் இருந்ததாக அரசு தரப்பு சாட்சியான அசா.1, அசா.2 ஆகியோர் சாட்சியமளித்துள்ள நிலையில் எந்த தனி நபர்களும் எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கவில்லை. மேலும், அசா.1 தனது குறுக்கு விசாரணையில், ரோந்து சென்றதற்கு காவல் நிலையத்தில் வைத்து தனி அறிக்கை தயார் செய்ததாகவும், அந்த தனி அறிக்கையின் படி தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தனிஅறிக்கையில் தானும், கார்த்திக் என்பவரும் கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ள நிலையில், அசா.2 தனது குறுக்கு விசாரணையில் தனி அறிக்கை தயார் செய்யப்பட்டு அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது. மேலும், இந்த வழக்கில் அத்தாட்சி படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தனிஅறிக்கையின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டதாக அசா.1 சாட்சியமளித்துள்ளது முரண்பாடாக உள்ளது.

16) பொதுவாக, ஒரு இடத்தை போலீசார் சோதனை செய்யும் போதோ அல்லது எதிரியை சோதனை செய்யும் போதோ அல்லது வழக்கு சொத்தை கைப்பற்றும் போதோ சாட்சியாக இருக்கும் பொருட்டு தனிநபர்களை அழைக்க போலீசார்களுக்கு BNSS பிரிவு 103 கீழ் சட்ட உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் படி ஒரு வழக்கு சம்பந்தமாக போலீசார் சோதனை செய்யும் போதோ அல்லது வழக்கு சொத்தை கைப்பற்றும் போதோ தனி நபர்கள் யாரேனும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அழைக்கப்பட்டும் அவ்வாறு அவர்கள் சாட்சியாக இருக்க முன்வராத பட்சத்தில் அவர்கள் மீது BNS பிரிவு 222-ன் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. விசாரணை அதிகாரி சாட்சியாக இருக்க முன்வராத நபர்களின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது அரசுத் தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சம்பவ இடத்தில் 10, 20 நபர்கள் இருந்ததாக அசா.1 சாட்சியமளித்துள்ள நிலையில் நடுநிலையான சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியம்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:23 +0530

அளிக்கவில்லை என்பது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைகிறது. பார்வை மகஜர் சாட்சிகள் இந்த வழக்கில் கையொப்பம் செய்துள்ள நிலையில் தனிநபர்கள் சாட்சியாக வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கு அத்தாட்சியில் கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று அரசு தரப்பு வாதம் நம்பும்படியாக இல்லை.

17) மேலும், அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் சம்பவ சமயத்தில் ரோந்து பணியில் இருந்ததற்கான ஆவணம் எதையும் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் காவல்துறை சாட்சிகள் ஆகும். இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக நடுநிலையான சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி மது விற்பனை செய்ததாக பொதுமக்கள் யாரும் எதிரிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் நடுநிலையான சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்பதால் அத்தாட்சி மூலம் வழக்கு சொத்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கு நம்பும்படியாக இல்லை. காவல்துறை சாட்சிகளை வைத்து மட்டும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலன் கருதி சரியாக இருக்காது.

18) இந்த வழக்கில் எதிரியிடம் சோதனை செய்வதற்கு அவருக்கு ஆட்சேபனை இல்லை என்று சம்மத கடிதம் எதிரியிடம் பெற்றதாக எந்த ஆவணமும் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு தரப்பு வழக்கு உண்மையாக இருந்திருந்தால் நடுநிலையான சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியமளித்திருப்பார்கள். அசா.1 மற்றும் அசா.2 ஆகிய சாட்சிகள் குறுக்கு விசாரணையில் முரண்பாடுகளுடன் சாட்சியமளித்துள்ளதால், அவர்களின் முதல் விசாரணையின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எதிரி உண்மையில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அரசு தரப்பு சாட்சிகள் முரண்பாடுகளின்றி சாட்சியமளித்திருப்பார்கள். இந்த வழக்கில் நடுநிலையான சாட்சிகள் இல்லாத நிலையில் காவல்துறை சாட்சிகளை வைத்து மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. பார்வை மகஜர் சாட்சி இந்த வழக்கில் கையொப்பம் செய்துள்ள நிலையில் தனிநபர்கள் சாட்சியாக வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கு கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று அரசு தரப்பு வாதம் நம்பும்படியாக இல்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:28 +0530

19) முடிவில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 4(1)(C) r/w 4(1)(a), 4(1)(A) r/w 4(1)(i) of TNP Act கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி அல்ல என BNSS பிரிவு 271(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20) இவ்வழக்கில் பி.ஆர்.எண். 752/2024 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசா.பொ.1 முதல் அசா.பொ.3 யை மேல் முறையீடு காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயப்படுத்த உத்தரவிடப்படுகிறது.

21) இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரி BNSS பிரிவு 481 ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 20 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.20 17:57:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திரு. தாமோதரன் (இரண்டாம்நிலைக் காவலர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | கண்ணுற்ற சாட்சி |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.20 17:57:38 +0530

| | | |
|---|---|---|
| 2. | திரு. பொன்ராஜ் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | கண்ணுற்ற மற்றும் புலன்விசாரணை அதிகாரி சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | அத்தாட்சியில் உள்ள அசா.1ன் முதல் கையொப்பம் – 13.11.2024 | அ.சா.1 – 18.02.2026 | அசல் |
| 2 | அத்தாட்சி – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 | அசல் |
| 4 | பார்வை மகஜர் – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 | அசல் |
| 6 | படிவம் 91 – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:**

| சான்றுப் பொருள் எண் | சான்றுப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் மூலம் / சான்றளித்தவர் மூலம் |
|---|---|---|
| 1. | பி.ஆர்.எண்.752/2024 வரிசை எண்.1ல் தாக்கல் செய்யப்பட்ட 180 மிலி அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் – 4 எண்ணம் – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 |
| 2. | பி.ஆர்.எண்.752/2024 வரிசை எண்.2ல் தாக்கல் செய்யப்பட்ட Golden Vats Brandy பாட்டில்கள் – 2 எண்ணம் – 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:44 +0530

| | | |
|---|---|---|
| 3. | பி.ஆர்.எண்.752/2024 வரிசை எண்.3 ல் தாக்கல் செய்யப்பட்ட பணம் ரூ.200/- - 13.11.2024 | அ.சா.2 – 16.07.2026 |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.07.20 17:57:52 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**கோவில்பட்டி**